டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 23.8.2023 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 56 - Madurai | Online Edition

அக்ரி-டாக்டர்
மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

# உரங்களின் கையிருப்பு

## மாநில வேளாண் அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்திய மத்திய உரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா



புது தில்லி, ஆக.22

நாட்டில் உரங்களின் இருப்பு மற்றும் பயன்பாடு குறித்து மாநில வேளாண் அமைச்சர்களுடன் மத்திய ரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா நேற்று கலந்துரையாடினார். கூட்டத்தில், நானோ யூரியா, நானோ டிஏபி போன்ற உரங்கள் பயன்பாட்டின் முன்னேற்றம் மற்றும் மாற்று உரங்களை ஊக்குவித்தல் போன்றவை குறித்தும் அவர் ஆய்வு செய்தார்.

கூட்டத்தில் பேசிய டாக்டர் மாண்டவியா, நாட்டில் போதுமான அளவு உரங்கள் கையிருப்பில் இருப்பதாகவும், தற்போது 150 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவித்தார். இது நடப்பு காரீஃப் பருவத்துக்கு போதுமானதாக இருக்கும் என்பதுடன், வரவிருக்கும் ராபி பருவத்திற்கும் பயன்படும் என்று கூறினார்.

மண்ணைப் பாதுகாக்க ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்க வேண்டியதன் அவசியத்தை டாக்டர் மாண்டவியா எடுத்துரைத்தார். 'பிரதமர்–பிரணாம்' திட்டத்தின் கீழ், மத்திய அரசு ஏற்கனவே இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது என்று அவர் கூறினார். பூமித் தாயைக் காப்பாற்ற மாற்று உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக யூரியா கோல்ட், நானோ யூரியா, நானோ டிஏபி போன்றவற்றை அறிமுகப் படுத்துவதும் இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்யும் வகையில் நாடு முழுவதும் பிரதமரின் வேளாண் வள மைங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அனைத்து மாநில வேளாண் அமைச்சர்களும், மாநில அரசு அதிகாரிகளும் இந்த இந்த வேளாண் வள மையங்கள் தொடர்பாக விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வேளாண் அமைச்சர்கள், உரத் துறை மற்றும் வேளாண்மைத்துறையின் மூத்த அதிகாரிகள், மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாட்டில்

# 6 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஆக.22

தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சேலம், நாமக்கல், கரூர், தர்மபுரி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இன்று (23.8.23) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை முதல் 28.8.23 வரையில், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்தமட்டில், வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும்.

அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை 34-35 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களைப் பொறுத்தமட்டில் எச்சரிக்கை ஏதுமில்லை.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 8வது வேளாண் பட்டதாரி மாணவர்கள் கருத்தரங்கம்



கோவை, ஆக.22

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம், கோயம்புத்தூரில் ஆகஸ்ட் 22 மற்றும் 23, 2023 அன்று ’8வது வேளாண் பட்டதாரி மாணவர்கள் கருத்தரங்கத்தை (AGSC) ஏற்பாடு செய்துள்ளது. இந்த கருத்தரங்கத்தின் கருப்பொருளாக ‘வேளாண் உலகமயமாக்கலில் உணவு, தீவனம் மற்றும் எரிபொருள்‘ தேர்வு செய்யப்பட்டு நடத்தப்படுகிறது.




முன்னதாக நடைபெற்ற துவக்க விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட புகழ்பெற்ற ஜேம்ஸ் மெக்கில் (கனடா) பேராசிரியர் முனைவர் விஜயராகவன், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ராமசாமி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் தமிழ் வேந்தன், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில், வேளாண் கல்லூரி முதன்மையர் முனைவர் ந.வெங்கடேச பழனிச்சாமி, ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி கருத்தரங்கத்தை தொடங்கி வைத்தனர்.

இதைத் தொடர்ந்து முதன்மையர் ந.செந்தில் பல்கலைக்கழகம் சார்பாக சிறப்பு விருந்தினர்களை வரவேற்று பேசினார். நிகழ்வின் சிறப்பு விருந்தினரான வாழ்நாள் சாதனையாளர் வேளாண் விஞ்ஞானி விஜயராகவன் சிறப்பானதொரு துவக்க உரையை நிகழ்த்தினார். அவர் வேளாண்மையில் நவீன மயமாக்கலில் முக்கியத்துவத்தையும் ஒருங்கிணைந்த உணவு உற்பத்தியின் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் மாணவர் களின் பங்கையும் விவரித்தார். இதனையடுத்து பேசிய முன்னாள் துணைவேந்தர் ராமசாமி இக்கருத்தரங்கின் முக்கியத்துவத்தையும் வருங்காலங்களின் வேளாண்மைக் கான தீர்வுகளையும் பற்றி பேசினார். இதைத்தொடர்ந்து கருத்தரங்கத்தின் இதழ் வெளியிடப்பட்டது.

வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, தமது தலைமையுரையில், வேளாண்மையின் முக்கியத்துவம், இந்த நூற்றாண்டுக்கான வேளாண் முன்னெ டுப்புகள், இக்கருத்தரங்கத்தின் சிறப்புகள், பல்கலைக் கழகம் மற்றும் மாணவர்களின் சாதனைகள் பற்றியும் உரை நிகழ்த் தினார்.

மேலும் பேசிய அவர், முதுநிலை மற்றும் முனைவர் பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகைகள் பற்றியும்,



உலகெங்கிலும் உள்ள பல்வேறு வேளாண் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து நடத்தப்படுகின்ற ஆய்வுகள் பற்றியும் பேசினார்.

உலகெங்கிலும் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்து புகழ்பெற்ற விஞ்ஞானிகள் மற்றும் பேராசிரியர்களான தெற்கு டகோட்டா மாநில பல்கலைக்கழக (அமெரிக்கா) தாவர அறிவியல் துறை பேராசிரியர் முனைவர் செந்தில் சுப்ரமணியன், SV வேளாண்மைக் கல்லூரி (திருப்பதி) இணை முதன்மையர் முனைவர் ஜி.பிரபாகர ரெட்டி, Corteva Agri-science, ஹைதராபாத் முனைவர் எட்வின் ரோக்பெல் ஜெயசிங், Renewable Cogen Globe – EECC தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் பாலசங்கரி பால்காட் கிருஷ்ணன் மற்றும் சுல்தான் கபூஸ் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் முனைவர் ஹமீத் சுலைமான், ஆகியோர் பங்குபெற்று மாணவர்களுடன் தங்கள் அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்தனர். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு துறைகள் மற்றும் மாநில கல்லூரிகளிலிருந்து வந்திருந்த முதன்மையர்களும் துறைத்தலைவர்களும் கலந்துக்கொண்டனர். அனைவருக்கும் மலர்செண்டும் நினைவுப்பரிசும் அளித்து கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வின் நிறைவாக முனைவர் பட்ட மாணவி கிருத்திகா நன்றியுரை வழங்கினார். வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மொத்தம் 1320 பங்கேற்பாளர்களும், விவசாயத் துறையில் முன்னணி விஞ்ஞானிகளும் நிபுணர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்று தங்கள் பங்களிப்பைச் செலுத்துகிறார்கள். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பான 460 சுவரொட்டி விளக்கக்காட்சிகளும் 70 வாய்வழி விளக்கக்காட்சிகளும் அடங்கும். ஒவ்வொன்றும் புதுமையான ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் மற்றும் விவசாயத்தின் உலகமயமாக்கலால் ஏற்படும் பன்முக சவால்களை எதிர்கொள்ளும் புதுமையான தீர்வுகளை உள்ளடக்கியது. மேலும், உலகமயமாக்கப்பட்ட விவசாயத்தில் உணவுப் பாது காப்பு, தீவன உற்பத்தி மற்றும் நிலையான எரிபொருள் முதலிய காரணிகளின் தாக்கங்களையும் சிக்கலான அதன் போக்குகள் பற்றி ஆராயும் ஆய்வுகளையும் முன்னிறுத்தியுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# திருச்சி மாவட்டத்திற்கான வானிலை முன்னறிவிப்பு மற்றும் வேளாண் ஆலோசனைகள்

இன்று முதல் 27.8.23 வரையிலான அந்த வாரத்தில் 4 நாட்கள் மிதமான முதல் கனமான மழை வரை எதிர்பார்க்கப் படுகிறது. சராசரி ஈரப்பதம் (காலை & மாலை), அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே (66.0% & 32.0%), 38.0°C மற்றும் 26.0°C என எதிர்பார்க்கப் படுகிறது. மழை பொழியக்கூடிய மேகங்கள் ஆங்காங்கே காணப்படும். காற்றின் வேகம் சராசரியாக மணிக்கு 10.4 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று மேற்கு திசையில் வீசக்கூடும்.

தற்பொழுது நிலவி வரும் சூழ்நிலையில் நெற்பயிரில் இலைச் சுருட்டுப்புழு தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த டிரைக்கோகிரேம்மா கிலோனிஸ் (முட்டை ஒட்டுண்ணிகளை) பயிர் நடவு செய்து 37, 44, மற்றும் 51 நாட்களில் மொத்தம் மூன்று முறை @ 5 சிசி (1 லட்சம் முட்டை ஒட்டுண்ணிகள் / எக்டர் /முறை) என்றளவில் விட வேண்டும். மரவள்ளியில் மாவுப் பூச்சியை கட்டுப்படுத்த அசிரோபாகஸ் பப்பாயே என்ற ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 100 எண்ணிக்கை விட வேண்டும்.

நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தக்காளியில் வெள்ளை ஈ-யின் தாக்கம் அதிகம் தென்படும். இதனைக் கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஓட்டும் பொறியை எக்டருக்கு 12 என்ற வீதம் வைத்து கட்டுப்படுத்தவும். நிலவக்கூடிய வானிலையின் காரணமாக சூரியகாந்தியில் பூவின் அடிப்பாகத்திலுள்ள இதழ்கள் மற்றும் பின்புறம் மஞ்சள் நிறமடைந்து பூக் கொண்டையிலுள்ள விதைகள் கடினத்தன்மை அடைந் திருப்பது முதிர்ச்சிடைந்தமைக்கு அறிகுறியாகும்.

உலர்ந்த பூக்கொண்டைகளைப் பறித்து உலர்த்திய பின் விதைகளைத் தனியே பிரித்தெடுத்து சுத்தம் செய்யவேண்டும். அறுவடைக்குப் பின் விதை நேர்த்தி செய்து விதைகளை 8 முதல் 9 சத ஈரப்பதம் வரும் வரை நன்கு உலர வைக்க வேண்டும்.

காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. கோழிகளுக்கு குளிர் காய்ச்சல் கூட ஏற்பட வாய்ப்புள்ளதால் கோழி கூடாரங்களை சுற்றிலும் அடைத்தவாறு கோணிப்பைகளை கட்டி தொங்கவிடவும்.

கறவை மாடுகளை ஐந்து முதல் எட்டு நிமிடங்கள் வரை நன்றாக கறந்து விட வேண்டும். இதனை பின்பற்றுவதன் மூலம் ஆக்ஸிடாக்சின் ஹார்மோன் சுரப்பு சீராக இருக்கும். மேலும் மடிவீக்க நோய் வராமல் தடுக்க இயலும்.

மேலும் விவரங்களுக்கு மேகதூட் செயலியை பதிவிறக்கம் செய்யுங்கள் என திருச்சி, சிறுகமணி, மாவட்ட வேளாண் வானிலை மையம் (DAMU), வேளாண்மை அறிவியல் நிலையத்தினை சேர்ந்த திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ப முரளி அர்த்தநாரி, வேளாண் காலநிலையியல் துறை தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் வே குகன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.




## சேலம் பூ மார்க்கெட் விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் வாங்கும் விலை நிலவரம் (விலை கிலோ 1க்கு)

| | | | |
|---|---|---|---|
| மல்லி | 360 | மஞ்சள் அரளி | 200 |
| முல்லை | 240 | செவ்வரளி | 200 |
| ஜாதி மல்லி | 240 | ஐ.செவ்வரளி | 160 |
| காக்கட்டான் | 240 | நந்தியாவட்டம் | 80 |
| கலர் காக்கட்டான் | 200 | சி.நந்தியாவட்டம் | 100 |
| மலைக்காக்கட்டான் | 240 | சம்மங்கி | 160 |
| அரளி | 140 | சாதா சம்பங்கி | 160 |
| வெள்ளை அரளி | 200 | | |



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தினம் ஒரு மூலிகை

## கொள்ளுக்காய் வேலை




கொள்ளுக்காய் வேலை சிறகு கூட்டில் களையும் உச்சியில் கொத்தான செந்நீல நிற மலர்களையும் தட்டையான வெடிக்க கூடிய காய்களையும் உடைய சிறு செடி. சாலையோரங்களில் தரிசி நிலங்களில் தானாக வளரும். செடி, வேர் மருத்துவ பயன் உடையது. கோழை அகற்றுதல், சிறுநீர் பெருக்குதல், வீக்கம், கட்டிகளை கரைத்தல் ஆகிய மருத்துவ குணமுடையது. வேருடன் சம அளவு மஞ்சள் சேர்த்து பாலில் அரைத்து பூசி வர கண்ட மாலை வீக்கம் கரையும். 10 கிராம் வேருடன் 5 கிராம் மிளகு சிதைத்து அரை லிட்டர் நீரில் நூறு மில்லியாக காய்ச்சி 50 மில்லி அளவாக காலை, மாலை சாப்பிட்டு வர பித்த நோய்கள், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் ஆகியவற்றில் உண்டான வீக்கம், வயிற்று வலி, சரியா காய்ச்சல் ஆகியவை தீரும். இரண்டு கிராம் வேரை மோரில் அரைத்து கலக்கி வடிகட்டி கொடுத்து வர வீக்கம் பாண்டு முகப்பரு கட்டிகள் ராசப்பறவை ஆகியவை குணமாகும். வேரை நீரில் கொதிக்க வைத்து கொப்பளித்து வர வாய்ப்புண், பல் வலி ஆகியவை தீரும்.

தகவல் : ASN சாமி, அங்கக ஒருங்கிணைந்த விவசாய பண்ணை மற்றும் மூலிகை பண்ணை, ஆதனூர். திருவண்ணாமலை மாவட்டம். 94423 11505.



# கால்நடை ஆம்புலன்ஸ் 1962-தெரியுமா?




மனிதர்களுக்கு அடுத்தபடியாக இருக்கும் உயிரினங்கள் தான் கால்நடைகள். மனிதர்களின் அவசர கால சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் இருப்பது போல கால்நடைகளின் அவசர கால சிகிச்சைக்காக இருப்பிடம் வந்து உயிர் காக்கும் சேவை செய்ய வந்து இருப்பது தான் இந்த கால்நடை ஆம்புலன்ஸ் 1962.

**இதன் நோக்கம் செயல்பாடுகள் தெரியுமா?**

கால்நடைகளுக்கான இலவச அவசர சிகிச்சைக்காக தமிழக அரசின் இந்த 1962 'இலவச ஆம்புலன்ஸ் திட்டம் 2016யில் தொடங்கப்பட்டு தற்போது வரை நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. விவசாயிகளின் வாழ்வாதாரமாக திகழும் கால்நடைகள் (பசு, எருமை, காளை, ஆடு, கோழி, குதிரை, நாய், பன்றி) போன்றவைகளின் கன்று ஈனுதல் பிரச்சனை, வயிற்று போக்கு, விக்கடி உள்ளிட்ட அவசர கால சிகிச்சைக் காக இந்த ஆம்புலன்ஸ் முக்கியத்துவம் கொடுக்கிறது.

**ஆம்புலன்ஸ்யில் உள்ள வசதிகள் என்ன?**

இந்த ஆம்புலன்ஸ் குழுவில் ஒரு கால்நடை மருத்துவர் மற்றும் கால்நடை மருத்துவ உதவியாளர் வாகனத்தை ஓட்டி செல்ல டிரைவர் ஒருவர் உள்ளிட்டவர்கள் இருப்பார்கள். நடக்க முடியாத சூழலில் கால்நடைகளை வாகனத்தில் ஏற்ற ஏதுவாக ஹைட்ராலிக் லிப்ட் வசதி, இரவிலும் சிகிச்சை அளிக்க உதவியாக ஜெனரேட்டர் மற்றும் இன்வெர்ட்டர் வசதியும் இந்த ஆம்புலன்ஸ்யில் உள்ளது. கால்நடை பராமரிப்பு துறையின் கீழ் 24 மணிநேரமும் செயல்படக்கூடியது.

**மற்ற மருத்துவ வசதிகள் என்ன?**

இந்த ஆம்புலன்ஸ் 1962யில் இரத்த மாதிரி உள்ளிட்ட பரிசோதனை மேற்கொள்ளும் நவீன மருத்துவ உபகரணங்கள், மருந்துகள், தடுப்பூசிகள் என பல்வேறு சிறப்பு வசதிகள் உள்ளன.

இதனால் சிக்கலான நிலையில் உள்ள கால்நடைகளுக்கு உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முடியாத நிலையில் உள்ள கால்நடைகளுக்கு இந்த ஆம்புலன்ஸ்-ல் உயிர் காக்கும் சிகிச்சை உடனே மேற்கொள்ள விரைவாகவும் உரிய நேரத்துல பயன்படுகிறது.

**எப்படி இந்த ஆம்புலன்ஸ் அழைப்பது?**

அவசர தேவைக்காக 1962 என்ற கட்டணமில்லாத அலைபேசிவாயிலாக கால்நடை உரிமையாளர் அழைப்பு விடுத்தவுடன் சம்மந்தப்பட்ட இடத்திற்கு ஆம்புலன்ஸ் விரைவாக தேடி வந்து நோய் பாதித்த கால்நடைகளுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கிறது.




எனவே கால்நடை வளர்ப்போர் தங்களுடைய அலை பேசியில் இந்த நம்பரை (1962) பதிவு செய்து அவசர தேவைக்காக அழைத்து கால்நடைகளை காக்க வேண்டும். இந்த ஆம்புலன்ஸ் கால்நடைகளின் காவலனாக உள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# இயற்கை விவசாயத்தில் தேமோர் கரைசல் மற்றும் அரப்பு மோர் கரைசல் தயாரிக்கும் வழிமுறைகள்

சேலம் மாவட்டம், சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையம், மாவட்ட வேளாண் வானிலை மையம் (ம்புனிஷீ, பெ. கலைச்செல்வி, இரா.ஜெகதாம்பாள், மா.இரவி, சி.பிரதீபா, மற்றும் செ.பிரபாகரன் ஆகியோர் தெரிவித்ததாவது, தேமோர் கரைசல் என்றால் என்ன? தேங்காய் பாலும், புளித்த மோரும் கலந்த கலவையே தேமோர் கரைசல். இயற்கை விவசாயத்தில் தேமோர் கரைசலின் பங்கு மிகவும் முக்கியமானதாக கருதப் படுகிறது. தேமோர் கரைசல் சிறந்த வளர்ச்சி ஊக்கியாகவும், பூச்சி விரட்டியாகவும், வைரஸ் நோயை கட்டுப்படுத்தக்கூடிய கரைசலாகவும் செயல்படுகிறது.





### தேவையான பொருட்கள்

- புளித்த மோர் – 5 லிட்டர்
- தேங்காய்ப்பால் – 1 லிட்டர்
- தேங்காய் துருவல் – 10 தேங்காய்
- அழுகிய பழங்கள் – 10 கிலோ

### தயாரிப்பு முறை

- புளித்த மோர் மற்றும் தேங்காய்ப்பால் ஆகியவற்றை ஒன்றாகக் ஒரு மண்பானை அல்லது பிளாஸ்டிக் கேனில் இட்டு, நிழலான இடத்தில் வைக்க வேண்டும்.
- இவற்றுடன் 10 தேங்காய்களின் துருவல், அழுகிய பழங்கள் 10 கிலோ இவற்றை பொட்டலம் போல் கட்டி அதில் போட வேண்டும்.
- தினமும் கரைசலைக் கலக்கி வரவேண்டும்.
- 7 நாட்களில் தேமோர் கரைசல் தயாராகி விடும்.

## பயன்படுத்தும் முறை

● 8ம் நாள், ஒரு லிட்டர் தண்ணீரில் 50 மில்லி தேமோர்க் கரைசல் என்ற விகிதத்தில் கலந்து, காலை அல்லது மாலை நேரத்தில் செடிகளுக்குத் தெளிக்கலாம்.

## நன்மைகள்

● தேமோர்க் கரைசல் என்பது பயிர் வளர்ச்சி ஊக்கியாகப் பயன்படுகிறது.

● பயிர்களில் பூ எடுக்கும் சமயத்தில் இக்கரைசலைத் தெளித்தால், பூக்கள் அதிகமாகப் பூக்கும்.

● இக்கரைசல் தெளிக்கப்பட்டு விளைந்த காய்கறிகள் மிகவும் சுவையாக இருக்கும்.







## அரப்பு மோர் கரைசல்

 

### தேவையான பொருட்கள்

- புளித்த மோர் – 5 லிட்டர்
- இளநீர் – 1 லிட்டர்
- அரப்பு இலைகள் – 1 முதல் 2 கிலோ
- 500 கிராம் பழ கழிவுகள் அல்லது பழ கழிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட 1 லிட்டர் சாறு.

### தயாரிக்கும் முறை

- அரப்பு இலைகளை நீருடன் சேர்த்து நன்கு அரைக்க வேண்டும்.
- பின்னர் இதனுடன் புளித்த மோர், இளநீர் மற்றும் பழச்சாறு ஆகியவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- இந்த கரைசல் கலவையை மண்பானை அல்லது பிளாஸ்டிக் வாளியில் ஒருவரா காலத்திற்கு வைத்திருக்க வேண்டும்.
- இந்த ஒருவரா காலத்தில் நொதிக்க தொடங்கி விடும். இந்த நொதித்த கரைசலே அரப்பு மோர் கரைசல் ஆகும்.
- அரப்பு இலை தூள் பயன்படுத்துவதாக இருந்தால், பழ கலவைகளுக்கு பதிலாக பழ சாறு பயன்படுத்த வேண்டும். நான்கு பொருட்களையும் கலந்து அதனை ஏழு நாட்களுக்கு நொதிக்க விட வேண்டும்.

### பயன்படுத்தும் முறை

- 1 லிட்டர் அரப்பு மோர் கரைசலுடன் 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

**நன்மைகள்**

● அரப்பு மோர் கரைசல் தெளிப்பதால் பூச்சிகள் தாக்குதல் இருக்காது.

● இது தாவர வளர்ச்சிக்கு உதவுகிறது மற்றும் பூஞ்சை நோய்களுக்கு எதிர்ப்பு தன்மை உருவாகிறது.

● அரப்பு மோர் கரைசலை பூப் பிடிக்கும் பருவத்தில் தெளிப்பதால் பயிர் வளர்ச்சி வேகமாக காணப்படும். நிறைய பூக்கள் பூக்கும்.

● அரப்பு மோர் கரைசலில் ஜிப்ரலிக் அமிலம் என்ற வளர்ச்சி ஊக்கி உள்ளதால் பயிர்கள் குறைந்த காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்து அதிக விளைச்சல் மற்றும் மகசூல் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், சேலம் - 636 203, 0427 242 2550.




AGRIYA
பயோ கம்போஸ்டர்
மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவை
INDOCERT
Input Approved in Organic Agriculture
AGRIYA
BIO COMPOSTER
Combination of Composting Microbes
1000 ml
For Agricultural use only
உபயோகீயுங்கள்
பயோ கம்போஸ்டர் பண்ணைக் கழிவுகளையும், நகர குப்பைக் கழிவுகளையும் முழுமையாக மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவையாகும்.
பயோ டெக்னாலஜி முறையில் தயாரிப்பதால் இது சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு தீங்கு விளைவிக்காது.
LINGA CHEMICALS
Customer Care: 0452 - 2321722

# நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த அட்மா பண்ணைப்பள்ளி துவக்கம்

அரியலூர், ஆக.22

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் தண்டலை கிராமத்தில் முன்னோடி விவசாயி கருணாநிதி, நிலக்கடலை சாகுபடித் திடலில் நடத்தப்பட்டது.

அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) பழனிசாமி, தலைமை வகித்து பண்ணைப் பள்ளியினை துவக்கி வைத்தார். அவர் பேசுகையில் விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகளைக் கடைபிடித்தும் நவீன வேளாண் தொழில் நுட்பங்களைத் தெரிந்து கொண்டும் பயிர் சாகுபடி மேற்கொண்டால் அதிக மகசூல் மற்றும் கூடுதல் வருவாய் பெறலாம் எனவும், உழவன் செயலியை பயன்படுத்தி இடுபொருட்கள் முன்பதிவு செய்யும் முறைகள் குறித்தும் விளக்கினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். வேளாண் அலுவலர் மகேந்திரவர்மன் கலந்து கொண்டு கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் குறித்தும் கிடங்கு இடுபொருட்கள் குறித்தும் விளக்கினார்.

கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் அசோக் குமார் கலந்து கொண்டு விதை அளவு, டிரைக்கோ டெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்யும் முறை, மண் ஆய்வுப்படி உரமிடுதலின் அவசியம், உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் அடியுரமாக ஜிப்சம் இடுதல் ஆகிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். இந்நிகழ்ச்சியில் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் கலந்து கொண்டு அலுவலர் களுடன் கலந்துரையாடி சாகுபடி குறித்த சந்தேகங்களுக்கு தீர்வு கண்டனர்.



முன்னதாக வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, பண்ணைப்பள்ளி குறித்தும் அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் விளக்கினார்.




நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் மகேஷ்குமார், குமணன், வட்டாரத் தொழில்நுட்பக்குழு உறுப்பினர் கோவிந்தராஜ், உழவர் நண்பர் சுந்தரவடிவேல் ஆகியோர் செய்திருந்தனர்.

நிலக்கடலை சாகுபடியில் களை நிர்வாகம், நீர் நிர்வாகம், உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாட்டு முறைகள், அறுவடை மற்றும் பின் அறுவடை தொழில் நுட்பங்கள், மதிப்பு கூட்டுதல் மற்றும் விற்பனை வாய்ப்புகள் ஆகிய பிற தொழில் நுட்பங்கள் பின்வரும் வகுப்புகளில் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டு பண்ணைப்பள்ளி நடத்தப்படும்.

# சேலம் மாவட்டம், ஆத்தூர், உழவர் சந்தை 22-8-23 காய்கறிகள் விலை விபரம்

(ரூ/கிலோ)

| | |
|---|---|
| 1. தக்காளி | ரூ. 25-30 |
| 2. உருளை | ரூ. 30-34 |
| 3. சின்ன வெங்காயம் | ரூ.40-45 |
| 4. பெரிய வெங்காயம் | ரூ.30-36 |
| 5. பச்சை மிளகாய் | ரூ.44-50 |
| 6. கத்தரி | ரூ.20-24 |
| 7. வெண்டைக்காய் | ரூ.12-15 |
| 8. முருங்கை காய் | ரூ.25-30 |
| 9. பீர்க்கங்காய் | ரூ.28-30 |
| 10. சுரக்காய் | ரூ.16-20 |
| 11. புடலங்காய் | ரூ.20-24 |




| | |
|---|---|
| 12. பாகற்காய் | ரூ.32-36 |
| 13. தேங்காய் | ரூ.25-30 |
| 14. முள்ளங்கி | ரூ.12-14 |
| 15. பீன்ஸ் | ரூ.60-64 |
| 16. அவரை | ரூ.40-48 |
| 17. ஊட்டி கேரட் | ரூ.35-70 |
| 18. வெற்றிலை | இல்லை |
| 19. மாங்காய் | இல்லை |
| 20. வாழைப்பழம் | ரூ. 30-40 |
| 21. கீரைகள் | ரூ.15- 20 |
| 22. பப்பாளி | ரூ.20-24 |
| 23. கொய்யா | ரூ.30-40 |
| 24. மாம்பழம் | இல்லை |
| 25. ஆப்பிள் | இல்லை |
| 26. சாத்துக்குடி | இல்லை |

தகவல் : நிர்வாக அலுவலர், உழவர் சந்தை, ஆத்தூர், சேலம் மாவட்டம்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கிருஷ்ணகிரி வட்டாரத்தில் கம்பம்பள்ளி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு குறித்த பயிற்சி



கிருஷ்ணகிரி, ஆக.22

கிருஷ்ணகிரி வட்டாரம், கம்பம்பள்ளி கிராமத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் அட்மா திட்டம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கினைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கம்பம்பள்ளி ஊராட்சியில் 'கிராம வேளாண் முன்னேற்ற குழு குறித்த பயிற்சி' நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் கிருஷ்ணகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.சுரேஷ்குமார் கூறியாதாவது, PM-Kisan – உதவி தொகை பெறும் விவசாயிகள் e-kyc செய்தல் மற்றும் வங்கிகளில் மூலம் உழவர் கடன் அட்டை (KCC) பெறுதல் மற்றும் அவற்றின் பயன்களை விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

சிறப்பு உரை ஆற்றிய கே.வி.கே,எழுமிச்சங்கிரி அறிவியல் மைய வல்லுநர் உதயன், நெல்லில் விவசாயி பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங்கள் விதைப்பின் போது விதை நேர்த்தி, பின்னர் ஒருங் கினைந்த பூச்சி நோய் மேலாண்மை முறைகள், நுண்ணூட்ட உரமிட வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட் நெல் நடவு செய்த மூன்று நாட்கள் கழித்து அவசியம் இட வேண்டும். அறுவடைக்கான உத்திகள், அறுவடை பின் சேய் நேர்த்திகள் போன்ற தொழில்நுட்பங்களை சரியான முறையில் பின்பற்றுவதால் கூடுதல் மகசூல் பெற எளிய வழி எனவும் கூறினார்.

V.விஜயன், உதவி வேளாண்மை அலுவலர், கிருஷ்ணகிரி, வேளாண்மைத் துறையின் திட்ட செயல்பாடுகள் குறித்தும் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் பயன்கள் மற்றும் இடுபொருட்கள் மானிய விலையில் பெறுதல் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

பூ.சண்முகம், உதவி தொழில்நுட்ப மேலாளர் அட்மா திட்டம் குறித்தும், செயல்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். இப்பயிற்சியில் 40 –க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.


SATHYAM Agro Clinic
HEALTHY CROPS
HAPPY FARMER
QUALITY PRODUCT
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# 18வது பார்த்தீனிய ஒழிப்பு விழிப்புணர்வு வாரம்

புதுக்கோட்டை, ஆக.22

பார்த்தீனிய ஒழிப்பு விழிப்புணர்வு வாரமானது ஜபல்பூரில் இயங்கி வரும் அகில இந்திய களை ஆராய்ச்சி இயக்குநராகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த பார்த்தீனிய ஒழிப்பு வாரமானது கடைபிடிக்கப்படுவதன் முக்கிய நோக்கம் இந்தக் கொடிய களை மேம்பாடு மற்றும் முற்றிலும் ஒழிப்பதற்காக ஆகும். பார்த்தீனியம் மனிதர்கள், விலங்குகளுக்கு மட்டுமன்றி சுற்றுப்புறச் சூழலுக்கும் மிக அதிக கேடு விளைவிப்பதால் பார்த்தீனிய ஒழிப்பு பற்றி அனைத்து தரப்பு மக்களும் இந்தப் பார்த்தீனிய வாரம் கடைபிடிப்பதன் மூலமாக அறிவுறுத்தப் படுகிறார்கள்.



இந்தப் பார்த்தீனிய வாரமானது ஸ்வட்ச் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் அனைத்து வேளாண்மை அறிவியல் நிலைய வளாகங்கள், அலுவலக வளாகங்கள் முற்றிலுமாக பார்த்தீனியமற்ற வளாகங்களாக மாற்றப்பட வேண்டும்.

இந்த பார்த்தீனியத்தை பூக்கும் பருவத்திற்கு முன் வேரோடு களைய வேண்டும். கிளைபோசேட் 1.0-1.5 % மற்றும் மெட்ரிபூசின் (0.3-0.5%) அல்லது 2,4-½ (1.0-1.5%) கொண்டும் கட்டுப்படுத்தலாம். உயிரியல் கட்டுப்பாடு முறையில் சைக்கோகிரம்மா பைகளோரேட்டா கொண்டும் கட்டுப்படுத்தலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

பார்த்தீனியம் பல்வேறு பெயர்களில் உலகெங்கிலும் அழைக்கப்படுகிறது. நாம் தமிழ்நாட்டில் இதை மூக்குத்திப்பூ என்று அழைக்கிறோம். மனிதர்களுக்கு தோல்நோய், ஆஸ்துமா, சுவாசக் கோளாறு ஆகியவை மிக முக்கியமான பாதிப்புகளாகும். பார்த்தீனியத்தின் ஒரே ஒரு செடியானது 5000-25000 விதைகளை உற்பத்தி செய்கிறது. இதன் விதைகள் மிக இலகுவாக இருப்பதால் காற்றில் எளிதில் பரவி பெருகி வருகிறது. மேலும் இவற்றை வேரோடு நாம் களையாவிட்டால், வெட்டப்பட்ட செடிகள் மேலும் வளர்ந்து பெருகிக் கொண்டேயிருக்கும்.

எனவே இந்த விச்செடியை ஒழிப்பதில் நாம் அனைவரும் பங்கேற்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் வேளாண்மை அறிவியல் நிலையம், வம்பன் 4 ரோடு, ஆலங்குடி சாலை, புதுக்கோட்டை மாவட்டம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# பருத்தி விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பருத்தி அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் குறிப்பாக காய்ப்புழு எதிர்ப்பு சக்தியுடைய (பிடி) பருத்தி அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும் காய்ப்புழு எதிர்ப்பு சக்தியுடைய (பிடி) பருத்தி விதைகளை மட்டுமே விற்பனை செய்வதற்கும், சாகுபடி மேற்கொள்வதற்கும் மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. பருத்தியில் களைக்கொல்லி எதிர்ப்பு சக்தியுடைய மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி விதைகளை உற்பத்தி செய்வதற்கோ, விற்பனை செய்வதற்கோ, சாகுபடி செய்வதற்கோ அரசு அனுமதி வழங்கப்படவில்லை.




இந்நிலையில், மத்திய அரசின் அனுமதி பெறாத களைக் கொல்லிகளை தாங்கி வளரக்கூடிய மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி ரக விதைகளை சிலர் விற்பனை மேற்கொள்ள முயல்வதாக தெரியவருகிறது. இவ்விதைகளை விற்பதும், வாங்கி சாகுபடி செய்வதும் சட்டப்படி குற்றமாகும். இதற்கு மாறாக மத்திய அரசினால் அனுமதி வழங்கப்படாத களைக்கொல்லி எதிர்ப்பு சக்தியுடைய பருத்தி விதைகளை சட்டத்தை மீறி விற்பனை செய்யவோ சாகுபடி செய்யவோ முயன்றால் விதை கட்டுப்பாட்டு ஆணை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் ஆ.வனஜா எச்சரித்துள்ளார்.